**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.132/2019

பெயர்-திரு.C.S.முருகேசன் நாள்.01.09.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) பிரதிவாதி சத்திவேல் எனக்கு எப்போது தெரியும் என்றால், 30.05.2019-ல் கிரைய ஒப்பந்தம் செய்ததலிருந்து எனக்கு தெரியும். அதற்கு முன்பு பிரதிவாதியை தெரியாதா என்றால், ஒரே பகுதியை சேர்ந்தவர் என்பதால், 10 ஆண்டுகளாக எனக்கு தெரியும். நானும், பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால், பக்கத்து ஊர்காரர்கள். நான் 30.05.2019 தேதியிட்ட கிரைய ஒப்பந்த்தை ரத்து செய்யக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஒப்பந்தம், எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால், தாவா சொத்தை விற்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. சுமார் ரூ.70,000/-க்கு மேல் கிரையத் தொகை பேசப்பட்டது. 30.05.2019-தேதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு, எத்தனை நாட்களுக்கு முன்பாக கிரையம் பேசப்பட்டது என்றால், சுமார் 1 மாத காலத்திற்குள் பேசப்பட்டது.

2) நான், தண்டபாணி இருவரும் சேர்ந்து தாவா சொத்தை பிரதிவாதிக்கு விற்பதற்காகத்தான் 30.05.2019-ல் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால், சரிதான். எனக்கு தாவா சொத்தின் ஒரு பகுதி 11.02.2008 தேதியிட்ட கிரையப் படி எனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மீதி பகுதி சொத்துக்கள் தண்டபாணிக்கு 21.07.2014 தேதியிட்ட கிரையப் படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 30.05.2019-ம் தேதிய ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்ய, யார் யார் சார்பதிவாளர் சென்றோம் என்றால், நான், தண்டபானி மற்றும் சாட்சியாக கண்ணதாசன் என்பவரும் மற்றொரு நபரை பிரதிவாதி அழைத்து வந்தார்.

3) ஆவணம் தயார் செய்யப்பட்டு, படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். பின்னிட்டு, அனைவரும் சேர்ந்துதான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் இட்டு பதிவு செய்தோம் என்றால், சரிதான். ஆனால் கிரையத் தொகையை கொடுக்கவில்லை. மேற்படி கிரையத்

தொகையை கொடுக்காததால் பதிவு செய்ய வரமாட்டோம் என்று நான் கூறவில்லை என்றால், சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் எங்களிடம் அடையாள அட்டைகளை சரிபார்த்து, விசாரித்து ஆவணம் பதிவு செய்தார்கள் என்றால், சரிதான். தாவா சொத்திற்குண்டான வருவாய்துறை ஆவணங்களில் பிரதிவாதியின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளாரா என்றால், இல்லை. தடையுத்தரவு கேட்டுதான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்ய மாவட்ட கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4) மேற்படி கிரைய ஆவணம் செய்தபிறகு, நான் பணத்தைப் பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால், பிரதிவாதி IDBI வங்கி காசோலையை கொடுப்பதாக கூறி, காண்பித்து விட்டு காசோலையோ, பணமோ தரவில்லை. கிரையம் செய்தநாள் முதல் மூன்று நான்கு மாதங்கள் நான் பிரதிவாதியிடம் கிரைய தொகையை கேட்டேன். கிரையம் செய்தநாள் முதல் கிரைய பணத்தை தராததால் எனக்கும், பிரதிவாதிக்கும் சுமூக உறவு இல்லை என்றால், சரியல்ல. நான் அவரது பேச்சை நம்பி காத்திருந்தேன். நான் பிரதிவாதியிடம் பணம் கேட்ட தேதிகள் ஞாபகம் இல்லை. சுமார் 7, 8 முறை பிரதிவாதியை அணுகி பணம் கேட்டேன். பிரதிவாதி பணம் தருவதாக நாட்களை கடத்தி வந்தார். பணம் கேட்டு 3, 4 மாதங்களில் வழக்கறிஞர் மூலமாக சட்டநடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. வழக்கு மட்டும்தான் தாக்கல் செய்தேன்.

5) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 13.07.2019 தேதியிட்ட LOK ADALAT உத்தரவின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரையப் பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு, தாவா சொத்தைத் தவிர எனக்கு 04.12.2008-ம் தேதியிட்ட கிரையப் படி எனக்கு வேறு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால், சரிதான். மேற்படி 04.12.2008 தேதிய ஆவண சொத்துக்களையும் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய, கடந்த 10.03.2017-ல் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 10.03.2017 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு ஞாபகம் இல்லை என கூறுகிறார். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதா ? என்றால், இல்லை.

6) இந்த வழக்கை தவிர, வேறு வழக்குகள் எனக்கும் பிரதிவாதிக்கும் இருந்ததா என்றால், 1, 2 வழக்குகள் உள்ளது. அந்த வழக்குகள் எந்த வருடம் இருந்தது என்றால், 2019-க்கு பிறகு இருந்தது. எனக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களைப் பொறுத்து, பிரதிவாதிக்கு விற்பனை செய்ய ஒப்பந்தம் செய்துவிட்டு, கிரையம் கொடுக்காததால் பிரதிவாதி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.233/2017 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். நானும், பிரதிவாதியும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தோம் என்றால், இல்லை. அ.வ.எண்.233/2017 வழக்கில் எனக்கும், பிரதிவாதிக்கு சமரசம் பேசப்பட்டு **LOK ADALAT**-ல் கடந்த 13.07.2019-ல் முடிக்கப்பட்டது என்றால், சரிதான். சமரச தீர்ப்பின் படி ஒரு மாத காலத்திற்குள், பாக்கி கிரைய தொகை ரூ.15,000/-ம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என உத்தரவாகியுள்ளது என்றால், சரிதான். ஆனால், வட்டியுடன் ரூ.6,00,000/ஐ என்னிடம் பிரதிவாதி வாங்கிக்கொண்டு, கிரையம் செய்ய வரவில்லை. அதனால், கிரையம் செய்து கொடுக்கவில்லை. மேற்படி விவரத்தை இவ்வழக்கில் கூறவில்லை என்றால், சரிதான்.

7) மேற்படி சமரச தீர்ப்பாணையின் படி கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுக்க பிரதிவாதி நி.ம.எண்.71/2023 என சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த மனுவில் எதிர் கட்சி செய்து வருகிறேன் என்றால், சரிதான். 30.05.2019-ல் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்து, பிரதிவாதி கிரையத் தொகையை செலுத்தாத பட்சத்தில் 13.07.2019-ல் பிரதிவாதியுடன் நான் சமரசம் செய்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், நான் சொல்வது போல் 30.05.2019-ல் கிரைய தொகை செலுத்தவில்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அ.வ.எண்.233/2017 வழக்கு சொத்து விவரம் வேறு, 30.05.2019-ம் தேதிய சொத்தும் வேறு என்பதால், அ.வ.எண்.233/2017 -ஐ நான் சமரசம் செய்துகொண்டேன். இவ்வழக்கை நான் 23.07.2019-ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

8) 13.07.2019-ல் சமரசம் செய்தபிறகு, பிரதிவாதியை பழிவாங்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பதிவு

செய்யப்பட்ட ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிப்பதால், எனது சாட்சியமும் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதி பணம் கொடுத்ததால்தான் நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் கிரையம் செய்து கொடுத்துவிட்டு, சுவாதீனமும் ஒப்படைத்துவிட்டு, சுவாதீன பரிகாரம் கேட்காமல் விளம்புகை மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. நான் கிரைய தொகையை கேட்டு வழக்கு தாக்கல் செய்யாமல், கிரைய ஆவணமே செல்லாது என வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால், சரியல்ல. எனவே, எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.01 17:23:55 +0530

District Munsif